சிந்து நடைக் கூத்தில் இடம்பெறும் சிவன் கஞ்சாவைப் பயன்படுத்தி போதைக்கு உள்ளாகின்றார். இதனால் மாரி பின்வருமாறு பாடுகின்றார்.

*“சுத்துகின்றார் அத்தான் சுத்துகின்றார்.*
*அவர் பம்பரம்போல் அத்தார் சுத்துகின்றார்”*

அடிநிலை மக்களின் இலக்கியங்களில் இத்தகைய காட்சிகள் தவிர்க்க இயலாதவை.

காத்தவராயன் சிந்து நடைக் கூத்து மக்களிடையே பெற்ற செல்வாக்கின் காரணமாக நீதி காத்தான் (மனுநீதிச் சோழன்), அறங்காத்தான் (குமணன்) என சிந்து நடைக் கூத்துக்கள் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத் தயாரிப்பாக எழுந்தன என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தம். விடுதலைப் புலிகள் காலத்தில் போராட்ட உணர்வை மக்களிடையே வளர்ப்பதற்காக நவீன காத்தவராயன் என சிந்து நடைக் கூத்து மேடையேற்றப் பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சி, சினிமா முதலிய பொழுது போக்குச் சாதனங்களின் பெருக்கத்தால் கூத்துக்கலை முறைமையும் பல சவால்களைச் சந்தித்து வருகின்றது. இளைய சந்ததியினருக்கு இத்துறை மீதான நாட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதிக நேரத்தைக் கூத்திற்காகப் பயன்படுத்துவதும் இதற்குரிய காரணமாக இருக்கலாம்.

ஈழத்தமிழரின் தனித்துவமான ஆடற்கலை வடிவமாகக் கூத்தினைக் கொள்ளும் சூழலில் இன்றைய சமூகத்தவர் விரும்பத்தக்க கலை வடிவமாக அதனை ஆற்றுகை செய்யக் கூடிய நுட்ப முறைகளைக் கையாண்டு பக்திச் செய்திகளைக் கூத்துக்கலையின் ஊடாக வளர்ப்பதற்கு அண்ணாவிமார்களும் கூத்துக்கலை ஆர்வலர்களும் முயல்வது நலம் பயப்பதாக அமையும். சமயச் செய்திகளைக் கருத்தாழமாகச் சொல்வதற்கு நாடக வடிவத்தை வலிமை மிக்க சக்தியாகக் கருதும் சூழலில் நம்மவர்களும் அத்தகைய தளத்தை முயன்று பார்ப்பது சாலச் சிறந்தது.

## *இரு ராசாக்கள் !* (ஆதிரையில் ஆடும் அழகர்கள்)

சைவ சமயத்தில் இரு ராசாக்கள் உளர் என்பர்! காவிரித் தென்கரைத் தலத்தில் விளங்கும் பதியாகிய திருவாரூர் தியாகராசர் ஒரு ராசா ! காவிரியின் வடகரையில் விளங்கும் பதியாகிய சிதம்பரத்தின் நடராசர் ஒரு ராசா !இருவருமே ஆதிரையர்கள்அதாவது, இருவருமே ஆதிரை நாளில் விழா காண்பவர்கள். தில்லையின் நடனம் ஆனந்த தாண்டவம். தியாகரின் நடனம் அஜபா தாண்டவம்.இருவரும் செங்கழுநீர் மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர்த் தாமத்தார் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர். தில்லை பொற்கோயில் என்றால் தியாகராசருடையது பூங்கோயில் ! தில்லை பெருமான் ஆகாச வடிவினர் என்றால் திருவாரூர் பெருமான் பூமி வடிவினர் ! இரண்டு இடங்களிலும் ஆயிரம்கால் மண்டபம் உள்ளது.



தியாகராஜர்

தில்லையிலும் திருவாரூரிலும் மூலலிங்கத்திற்கு “ மூலட்டானேசுவரர் “ என்றே பெயர். இருபெருமானும், அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்து பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான் சுந்தரருக்கு “ தில்லைவாழ் அந்தணர் “ என்று அடியெடுத்துக் கொடுக்க தில்லைக்கூத்தரோ பெரியபுராணம் பாட “ உலகெலாம் “ என்று அடியெடுத்துக் கொடுத்தார். திருவாரூர் பெருமான் தில்லை எனும் சிதம்பரத்தை அடியெடுத்துக் கொடுக்க தில்லையெம்பெருமானோ “ உலகம் “ எனும் மண் தத்துவத்தை உணர்த்தும் விதமாக அடியெடுத்துக் கொடுத்ததை என்ன சொல்ல ! இரண்டு இடங்களிலும் பதஞ்சலி மற்றும் புலிக்கால்முனிவர் ஆகிய இருவரும் பாததரிசனம் பெற்றனர்! சிதம்பரத்தில் பெருமானின் அதிர வீசி ஆடத் துவங்கிய இடது பாத தரிசனத்தைக் கண்டு பின்னர் திருவாரூர் வந்து இருந்தாடும் கூத்து கண்டு பங்குனி உத்திர நாளில் வலது பாத தரிசனத்தைக் காணப்பெற்றனர்!

சிவபெருமான் எல்லாருடைய இதயக் குகையிலும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார். கூத்தப்பெருமானை அகத்திலும் புறத்திலும் கண்டு சுவைத்த நிலையில் தம் அருளனுபவங்களைச் சமைய ஞானியரும் சித்தர்களும் தம் அருளனுபவங்களை நம்முடன் பகிர்ந்துள்ளார்.அவ்வரிசையில் காரைக்கால் அம்மையார் தம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பாடியதுபோல் “ அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கவேண்டும் “ என வேண்டி விரும்பிப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராம் கிருஷ்ணஸ்வாமி